**O.S.No. 230/2018**

**PW1 : பாப்பாத்தி (எ) ஜெயலட்சுமி** தேதி 22.01.2026

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மலையாண்டி காட்டின் மொத்த விஸ்தீரணம் 2 ½ ஏக்கருக்குள் இருக்கும். அதன் சர்வே எண் 231/1 என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் போது ச.எண் 231/3 என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆம் அவ்வாறு தான் சொல்லியருக்கிறேன். அதில் மொத்த விஸ்தீரணமான 4.77 ஏக்கரில் பொதுவில் 1.19 ¼ என்று சொல்லியுள்ளேன். கூட்டு பங்குதாரர்கள் ஆறுமுக கவுண்டர் மற்றும் அப்புகுட்டி, பொங்கியாகவுண்டர் மற்றும் அவருடைய மகன்கள் 3 பேர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் பக்கத்து காட்டுகாரர்கள் என்று சொல்லியிருக்கிறேன். மொத்தம் 10 ஏக்கரில் ¼ ல் பங்கை நான் அனுபவத்து வருகிறேன். முதலில் வழக்கு தாக்கல் செய்யும் போது கிணறை சேர்க்கவில்லை என்றால் முதலில் சேர்க்கவில்லை பின்னிட்டு சேர்த்துவிட்டேன். சொத்தில் 5 எச்.பி ஆயில் உள்ளது என்றால் சரியல்ல அதை விற்று விட்டார்கள். கிணறு கூட்டு பங்கு தான். காடு மற்றும் கிணற்றில் கூட்டு பங்குதாரர்கள் ஆறுமுக கவுண்டர் மற்றும் அப்புகுட்டி, பொங்கியாகவுண்டர் ஆகியோர்களை சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் மூவரும் வாய்மொழியாக ஒரே பக்கமாக அனுபவித்து வருகிறார்கள். மேற்படி விவரத்தை என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பொங்கியா கவுண்டர் இறந்து விட்டார். அவருடைய 3 மகன்களும் இறந்து விட்டார்கள். அவர்களுடைய வாரிசுகள் 7 பேர் இருக்கிறார்கள் என்றால் தெரியாது. அப்புகுட்டி மற்றும் ஆறுமுகம் உள்ளார்கள். 1.19 1/4 ஏக்கர் என்று தாவா சொத்தை திருத்தம் செய்து 2.1 ஏக்கர் என்று சொல்லியிருக்கிறேன். மேற்படி சொத்தில் நான் சுவாதீனத்தில்

இல்லை என்பதால் தான் விஸ்தீரணத்தை தவறாக சொல்லியருக்கிறேன் என்றும் கூட்டு பங்குதாரர்கள் சுவாதீனத்தில் இருப்பதால் தான் மேற்படி விஸ்தீரணத்தை திருத்தி அமைத்தேன் என்றால் சரியல்ல.